பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்
13 ஜூலை 2009
சென்னை-600 005
சேப்பாக்கம்

சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி – விடுதிகள் – 2009–2010–ஆம் ஆண்டு – நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி துவங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1) துறை

அரசாணை (நிலை) எண். 51 நாள்: 3.7.2009

படிக்கப்பட்டது :

1. நாகப்பட்டினம், மாவட்டம், திருக்குவளை கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனர் திரு. சோ. பாவாடைசாமி அவர்களின் 16.1.2009 நாளிட்ட மனு.
2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண். பி4/437/2009, நாள் 28.1.2009.

---

ஆணை:

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையைச் சேர்ந்த திரு. சோ. பாவாடைசாமி என்பவர் அங்குள்ள அஞ்சுகம் முத்துவேலர் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் நலனுக்கென பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்கக் கோரியிருந்தார். இவ்விடத்தில் விடுதி துவங்குவதற்கான சாத்தியக்கூறு குறித்து பெறப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அறிக்கையில் நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் விடுதி துவங்க சாத்தியக்கூறு உள்ளதெனவும், இவ்விடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி துவங்கலாம் எனவும் பரிந்துரைத்து அதற்குரிய செயற்குறிப்பினையும் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்கூறிய செயற்குறிப்பு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன:

| | |
|---|---|
| (i) | 2009–2010–ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் ஒரு புதிய பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி துவங்கிட அரசு ஆணையிடுகிறது. |
| (ii) | இப்புதிய விடுதி ஜூலை 2009 முதல் வாடகை கட்டிடத்தில் துவங்கிட அனுமதிக்கப்படுகிறது. |
| (iii) | இவ்விடுதியில் 50 மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும். |

3. புதிதாக துவங்கப்படும் இவ்விடுதிக்கு ரூ.9300–34800+4400 என்ற ஊதிய ஏற்ற முறையில் ஒரு பி.எட். பட்டதாரி போதக காப்பாளர் பணியிடம் ரூ.4800-10000+1300 என்ற ஊதிய ஏற்ற முறையில் ஒரு சமையலர் பணியிடம் மற்றும் ரூ.4800-10000+1300 என்ற ஊதிய ஏற்ற முறையில் ஒரு காவலர் மற்றும் ஏவலர் பணியிடம் என மொத்தம் 3 பணியிடங்களை ஏற்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 2–ல் புதிதாக துவங்கிட அனுமதிக்கப்பட்டுள்ள நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதிக்கு 2009–2010–ஆம் ஆண்டில் செலவினமாக மொத்தம் ரூ.6,70,000/–க்கு (ரூபாய் ஆறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) ஒப்புதல்

அளித்து அரசு ஆணையிடுகின்றது. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் அதில் கண்டுள்ளவாறு பற்று வைக்கப்படவேண்டும்:

(i) பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி: (பள்ளி விடுதி – ஒன்று மட்டும்)

2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II – மாநில திட்டம் – JA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| | தொடர் செலவினம் (ரூ. ஆயிரத்தில்) | தொடரா செலவினம் (ரூ. ஆயிரத்தில்) |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(DPC 2225-03-277-JA-0106) | 224 | -- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-JA-0553) | --- | 30 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(DPC 2225-03-277-JA-0615) | 54 | -- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(DPC 2225-03-277-JA-2408) | --- | 96 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-JA-3425) | --- | 30 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-JA-6799) | 203 | --- |
| 68 புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் சிலேட்டுகள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவு<br>(DPC 2225-03-277-JA-6806) | --- | 9 |
| 99 பல்வகை<br>(DPC 2225-03-277-JA-9901) | 14 | 10 |
| மொத்தம் | 495 | 175 |

5. தொடரா செலவினத்தில் பள்ளி விடுதிக்கு கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான செலவினம் அனுமதிக்கப்படுகின்றது.

| வரிசை எண். | செலவினம் | அனுமதிக்கப்படும் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| (i) | எரிவாயு இணைப்பு | 30,000 |
| (ii) | நூலக வசதி | 30,000 |
| (iii) | பாத்திரங்கள் | 30,000 |
| (iv) | மரச்சாமான்கள் | 30,000 |
| (v) | அரவை இயந்திரம் | 8,000 |
| (vi) | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 |
| (vii) | விளையாட்டு கருவிகள் | 5,000 |

| | | |
|---|---|---|
| (viii) | பாய் (50 எண்ணிக்கை x ரூ.44) | 2,200 |
| (ix) | பெட்ஷீட் (50 எண்ணிக்கை x ரூ.100) | 5,000 |
| (x) | முதலுதவி பெட்டி | 650 |
| (xi) | தட்டு மற்றும் டம்ளர் (50 எண்ணிக்கை x ரூ.75) | 3750 |
| (xii) | அகராதி மற்றும் அட்லஸ் (50 எண்ணிக்கை x ரூ.175) | 8750 |
| (xiii) | ஏனைய செலவுகள் | 10000 |

6. இதற்கான நிதி திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2009–2010–இல் ஒதுக்கீடு செய்யப்படும். நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, இதற்கான செலவினை மேற்கொள்ள பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இச்செலவினத்தினை திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2009–2010–ல் சேர்க்க, தக்க சமயத்தில் கருத்துரு அனுப்புமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா. எண். 35983/நிதி(பி.மி.பி.)/2009, நாள். 29.6.2009 மற்றும் அ.சா.எண். 37292/CMPC/2009–1, நாள். 30.6.2009–ல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 305 (முந்நூற்று ஐந்து)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

து.நா. இராமநாதன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர். பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை – 5
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை-5.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம்.
மாநில கணக்காயர், சென்னை–18 /(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை – 1), சென்னை18/(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை–2), சென்னை – 6/(பெயரில்)
மாவட்ட கருவூல அலுவலர், நாகப்பட்டினம்.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், நாகப்பட்டினம்.
**நகல் :**
நிதித்(பி.மிபி/வ.செ.பொ.I/வ.செ.பொ.II/CMPC) துறை, சென்னை– 9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9.
அமைச்சர் (பிந) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பி.மி.பி (ம) சிந (பிந3 /சிநஆபி) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்.